www.Padasalai.Net www.TrbTnpsc.com

VELLORE DISTRICT

# இரண்டாம் திருப்புதல் தேர்வு – 2025

## பதினொன்றாம் வகுப்பு

நேரம்: 3.00 மணி **பொருளியல்** மதிப்பெண்கள்:90

### பகுதி – அ

I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 20x1=20

1. தொகையீடு என்பது ______ ன் தலைகீழ் செயல்பாடாகும்.
அ) வேறுபாடு ஆ) கலவை இ) கலந்த கலவை ஈ) வகையீடு

2. GST யில் அதிக அளவு வரிவிதிப்பு ______ (ஜீலை 1, 2017 ன் படி)
அ) 28% ஆ) 18% இ) 32% ஈ) 24%

3. பொருளின் விலைக்கும் அளிப்பிற்கும் இடையேயான தொடர்பு
அ) எதிர்மறை ஆ) நேர்மறை இ) பூஜ்யம் ஈ) அதிகரிக்கும்

4. V.K.R.V. இராவ் இவரின் மாணவராக இருந்தார்.
அ) J.M. கீன்ஸ் ஆ) காலின் கிளார்க் இ) ஆடம் ஸ்மித் ஈ) மார்ஷல்

5. SPIC – அமைந்துள்ள இடம்
அ) சென்னை ஆ) மதுரை இ) தூத்துக்குடி ஈ) புதுக்கோட்டை

6. சராசரி மாறாச் செலவுக்கான வாய்பாடு
அ) TC/Q ஆ) TVC/Q இ) TAC/Q ஈ) TFC/Q

7. இந்தியாவில் முதல் சிறப்பு பொருளாதார மண்டலம் ஏற்படுத்தப்பட்ட இடம் ______
அ) மும்பை ஆ) சென்னை இ) காண்ட்லா ஈ) கொச்சின்

8. திட்டக்குழு அமைக்கப்பட்ட ஆண்டு ______
அ) 1950 ஆ) 1955 இ) 1960 ஈ) 1952

9. எப்போது நிறுவனம் இலாபம் பெற முடியும்?
அ) TR<TC ஆ) TR-MC இ) TR>TC ஈ) TR=TC

10. சராசரி உற்பத்தி (AP) யை கணக்கிட பயன்படும் விகிதம்
அ) ΔTP/N ஆ) ΔTP/ΔN இ) TP/MP ஈ) TP/N

11. சமநோக்கு வளைகோட்டின் அடிப்படையானது ______
அ) தரவரிசை ஆய்வு ஆ) இயல்பெண் ஆய்வு இ) பண்பளவை ஆய்வு ஈ) உளவியல் ஆய்வு

12. பொருளியலில் கணிதத்தை முதன் முதலாக பயன்படுத்தியவர் ______
அ) சர் வில்லியம் பெட்டி ஆ) ஜியோவானி செவா இ) ஆடம்ஸ்மித் ஈ) இர்விங்ஃபிஷர்

13. எச்ச உரிமை கூலிக் கோட்பாட்டை எடுத்துரைத்தவர்
அ) கீன்ஸ் ஆ) வாக்கர் இ) ஹாலே ஈ) நைட்

14. தனிக்கருத்திலிருந்து பொதுக்கருத்து பெறும் முறை
அ) பகுத்தாய்வு முறை ஆ) தொகுத்தாய்வு முறை
இ) இயல்புரை அறிவியல் ஈ) நெறியுரை அறிவியல்

15. இலாபம் இதற்கான வெகுமதி ஆகும்.
அ) நிலம் ஆ) அமைப்பு இ) மூலதனம் ஈ) உழைப்பு

16. தேவை நெகிழ்ச்சி என்ற கருத்தை அறிமுகப்படுத்தியவர்
அ) பெர்கூசன் ஆ) கீன்ஸ் இ) ஆடம் ஸ்மித் ஈ) மார்ஷல்

17. MUDRA வங்கி செயல்படுத்தப்பட்ட ஆண்டை குறிப்பிடுக
அ) 2000 ஆ) 2005 இ) 2010 ஈ) 2015

18. செலவு என்பது
அ) விலை ஆ) மதிப்பு இ) மாறாச் செலவு ஈ) உற்பத்தி செலவு

19. 1969–ஆம் ஆண்டில் நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளின் எண்ணிக்கை
அ) 19 ஆ) 12 இ) 14 ஈ) 16

20. தொன்மைப் பொருளாதாரத்தின் தந்தை யார்?
அ) மாக்ஸ் முல்லர் ஆ) ஆடம் ஸ்மித் இ) கார்ல் மார்க்ஸ் ஈ) பால்.அ.சாமுவேல்சன்

Scanned with CamScanner

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

VELLORE DISTRICT



பகுதி – ஆ

II எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். 7x2=14
வினா எண் 30–க்கு கட்டாயம் விடையளிக்கவும்.

21. பயன்பாட்டின் ஏதேனும் இரண்டு வகைகளை கூறுக.
22. நுகர்வோர் எச்சம் காணும் முறையை எழுதுக.
23. மூழ்கும் செலவுகள் என்றால் என்ன ?
24. உபரி சக்தி – விளக்குக.
25. பகிர்வின் வகைகள் யாவை ?
26. குறைந்த தலா வருமானம் இருக்க காரணங்களாக இராவ் கூறுவதை பட்டியலிடுக.
27. விடுதலை அடைவதற்கு முன் இந்தியாவில் காணப்பட்ட பல்வேறு வகையான நில உடைமை முறைகள் யாவை ?
28. தனியார் மயமாக்கல் என்றால் என்ன ?
29. மறைமுக வேலையின்மை என்றால் என்ன ?
30. மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) – வரையறு.

பகுதி – இ

III எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். 7x3=21
வினா எண் 40–க்கு கட்டாயம் விடையளிக்கவும்.

31. கணித முறையின் பொருளாதாரப் பயன்பாடுகளை விளக்குக.
32. தொழில் முனைவோரின் பணிகள் யாவை ?
33. அங்காடியின் இயல்புகள் யாவை ?
34. புத்தாக்க இலாபக் கோட்பாட்டை சுருக்கமாக கூறுக.
35. கிராம சர்வோதயா – சிறுகுறிப்பு வரைக.
36. PQLI என்றால் என்ன ?
37. GST என்றால் என்ன ? அதன் நன்மைகளை எழுதுக.
38. SHGs ன் பண்புகளைக் கூறுக.
39. நுண்ணியல் மற்றும் பேரியல் பொருளியலுக்கு இடையேயான வேறுபாடுகள் யாவை ?
40. தமிழ்நாட்டிலுள்ள புதுப்பிக்கதக்க ஆற்றல் வளங்கள் யாவை ?

பகுதி – ஈ

IV அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும். 7x5=35

41. அ) பொருளியல் துறையில் தகவல் தொழில்நுட்பங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன ? *(அல்லது)*
ஆ) உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டை விவரி.
42. அ) தமிழ்நாட்டின் பொதுத்துறை போக்குவரத்து முறைகளை விளக்குக. *(அல்லது)*
ஆ) குறைந்து செல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதியை விவரி.
43. அ) ஊரகக் கடன்களுக்கான காரணங்களை ஆராய்க. *(அல்லது)*
ஆ) விகித அளவு விளைவு விதியை எ.கா. உடன் விளக்குக.
44. அ) சிறப்பு பொருளாதார மண்டலங்களின் நோக்கங்களையும் பண்புகளையும் விளக்குக. *(அல்லது)*
ஆ) $TC=10+Q^3$, $Q=5$.எனில் AC, AVC, TFC, AFC காண்க.
45. அ) வணிக வங்கிகள் நாட்டுடமையாக்கப்பட்டதன் நோக்கங்களை விவரி. *(அல்லது)*
ஆ) முற்றுரிமையில் விலையும், உற்பத்தி அளவு எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது என்பதை விளக்குக.
46. அ) இந்திய பொருளாதாரத்தின் வலுவான கூறுகளை விவரி. *(அல்லது)*
ஆ) கடன்நிதி வட்டிக் கோட்பாட்டை விளக்குக.
47. அ) பல்வேறுபட்ட விலை நிலைகளில் AR மற்றும் MR கோடுகளுக்கிடையேயான தொடர்பை விளக்குக. *(அல்லது)*
ஆ) தேவை விதி மற்றும் அதன் விதி விலக்குகளை விவரி.

***/***

Scanned with CamSc
Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

11TH பொருளியல் விடைக் குறிப்பு

# இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2025
## வேலூர் மாவட்டம்
## prepared by

**Dr. C.SUDHAKAR M.A.,M.Phil.,B.Ed.,SET.,Ph.D.,**
**GBHSS USSOOR**
**Mr. K.SUDHAKAR M.A.,B.Ed.,**
**GHSS PANAMADANGI**

| | | | |
|---|---|---|---|
| 1 | ஈ) வகையீடு | 11 | அ.) தரவரிசை ஆய்வு |
| 2 | அ.) 28% | 12 | ஆ.) ஜியோவாணி செவா |
| 3 | ஆ.) நேர்மறை | 13 | ஆ.) வாக்கர் |
| 4 | அ.) J.M. கீன்ஸ் | 14 | ஆ.) தொகுத்தாய்வு முறை |
| 5 | இ.) தூத்துக்குடி | 15 | ஆ.) அமைப்பு |
| 6 | ஈ.) TFC/Q | 16 | ஈ.) மார்ஷால் |
| 7 | இ.) காண்ட்லா | 17 | ஈ.) 2015 |
| 8 | அ.) 1950 | 18 | ஈ.) உற்பத்தி செலவு |
| 9 | இ.) TR > TC | 19 | இ.) 14 |
| 10 | ஈ.) TP/N | 20 | ஆ.) ஆடம் ஸ்மித் |

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி: வினா எண் 30-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்**

| வினா எண் | விடை | மதிப் பெண் |
|---|---|---|
| 21 | 1. இடப் பயன்பாடு 2. வடிவப் பயன்பாடு | 2 |
| 22 | நுகர்வோர் எச்சம் = தகுவிலை - உண்மை விலை **(அல்லது)**<br>TU- (PxQ) Tu- மொத்த பயன்பாடு P- விலை Q- பண்ட அளவு | 2 |
| 23 | மீட்டு எடுக்க முடியாத கடந்த கால செலவுகள் அமைழ்த்தப்பட்ட செலவுகள் ஆகும் | 2 |
| 24 | நீண்ட காலத்தில் முற்றுரிமை போட்டியில் நிறுவனங்கள் உச்ச உற்பத்தி அளவை விட குறைவாகவே உற்பத்தி செய்கின்றனர் எனவே உபரிசக்தி வீணாக்கப்படுவதாக கருதப்படுகிறது. | 2 |
| 25 | 1. **தனிநபர் பகிர்வு :** நாட்டு வருமானத்தை தனி மனிதர்களிடையே பகிர்ந்து அளிப்பது<br>2. **பணி சார்பு பகிர்வு :** நான்கு உற்பத்தி காரணிகளுக்கு வருவாயை பகிர்ந்து அளிப்பது | 2 |
| 26 | 1. முறையற்ற நில உடைமை<br>2. முதலீடு இன்மை<br>3. வேளாண்மையில் அதிக மக்கள் தொகை அழுத்தம்<br>4. பேரளவு தொழில்துறை இன்மை | 2 |
| 27 | 1. ஜமீன்தாரி முறை<br>2. மஹல்வாரி முறை<br>3. இரயத்வாரி முறை | 2 |
| 28 | பொதுத்துறை நிர்வாகம் மற்றும் உரிமையை தனியாருக்கு மாற்றுவதை குறிக்கும் | 2 |

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| 29 | வேலையில் இருந்து சிலரை நீக்கினாலும் உற்பத்தியின் அளவு குறையாது ஏனென்றால் அவர்களின் இறுதிநிலை உற்பத்தித்திறன் பூஜ்யம். இதுவே மறைமுக வேலையின்மை எனப்படும். | 2 |
| 30 | மாநிலத்தில் ஓராண்டுக்கு உற்பத்தி செய்யப்படும் பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த பண மதிப்பு ஆகும். | 2 |


**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி: வினா எண் 40- க்கு கட்டாயமாக விடையளிக்கவும்**

| வினா எண் | விடை | | மதிப் பெண் |
|---|---|---|---|
| 31 | 1. பொருளியல் பிரச்சனைகளை சுருக்கமான வடிவில் வழங்க உதவுகிறது.<br>2. பொருளியல் கருத்துக்களை சுருக்கமாக விளக்கிட உதவுகிறது.<br>3. பொருளியல் ஆய்வு முறைகளில் அதிகம் பயன்படுகிறது.<br>4. அரசோ அல்லது ஒரு அமைப்போ நடைமுறைப்படுத்தும் பொருளாதார செயல்பாடு விளைவுகளை அளவிட கணித முறை உதவுகிறது. | | 3 |
| 32 | 1. தொழிலை தொடங்குபவர்.<br>2. புத்தாக்கம் புனைபவர்.<br>3. உற்பத்தி காரணிகளை ஒருங்கிணைப்பவர்.<br>4. தொழிலை மேற்பார்வையிடுபவர். | | 3 |
| 33 | 1. வாங்குபவர்,விற்பவர் இருக்க வேண்டும்.<br>2. பொருள்(பண்டங்கள்) இருக்க வேண்டும்.<br>3. பண்டங்களுக்கான விலை வேண்டும். | | 3 |
| 34 | 1. ஜோசப் A.சும்பீட்டர் இக்கோட்பாட்டை கூறினார்.<br>2. புத்தாக்கம் புனைவதற்கான வெகுமதிய லாபம்.<br>3. புதிய பண்டம், புதிய மூலப்பொருட்கள், புதிய உற்பத்தி முறைகளை கண்டறிதல். | | 3 |
| 35 | கிராம முன்னேற்றத்தைப் பற்றிய காந்தியடிகளின் கருத்தாகும். தன்னிறைவு, சுயசார்பு பெற்ற கிராமங்களாக இருக்க வேண்டும். உண்மையான இந்தியா வாழ்வது கிராமங்களில் என்கிறார். | | 3 |
| 36 | 1. செய்திறன் குறியீட்டு எண்.<br>2. மோரிஸ் டி மோரிஸ் உருவாக்கினார்.<br>3. ஆயுட்காலம், குழந்தை இறப்பு விதம், எழுத்தறிவு உள்ளடக்கியது. | | 3 |
| 37 | 2017 ம் ஆண்டு ஜூலை 1, பண்டங்கள் பணிகள் மீது விதிக்கப்படும் வரியாகும்<br>**நன்மைகள்:**<br>1. அடுக்கு வரி முறை நீக்கியது.<br>2. ஒரு முனை வரியாக உள்ளது.<br>3. மின்னணு வணிகம், இணைய வழி வசதி எளிமை படுத்தப்பட்டுள்ளது. | | 3 |
| 38 | 1. ஒரே மாதிரியான பொருளாதார நிலை உள்ளவர்களிடையே சுய உதவி குழு உறுப்பினரை தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.<br>2. 10 முதல் 20 பெண் உறுப்பினர்கள் கொண்ட சுய உதவி குழுக்கள்.<br>3. சேமிப்பு மற்றும் கடன் பெறுதல், கூட்டம், பதிவேடு பராமரித்தல் பணியினை செயகிறது. | | 3 |
| 39 | **நுண்ணியல் பொருளியல்**<br>1. தனி பண்டத்தின் விலை தனிப்பட்ட நிறுவனங்கள் தனி | **பேரியல் பொருளியல்**<br>1. நாட்டின் ஒட்டுமொத்த செயல்பாடுகளை பற்றி | 3 |

www.Padasalai.Net www.TrbTnpsc.com

| | | | |
|---|---|---|---|
| | குடும்பங்கள் பற்றி ஆராய்கிறது.<br>2. இது **விலைக் கோட்பாடு** என்றும் அழைக்கப்படுகிறது. | ஆராய்கிறது.<br>2. இது **வருவாய் கோட்பாடு** என்றும் அழைக்கப்படுகிறது. | |
| 40 | 1. புனல் மின்சாரம் - மேட்டூர், மரவகண்டி.<br>2. சூரிய சக்தி மின்சாரம் - தென் தமிழகம் உகந்த மண்டலமாக கருதப்படுகிறது.<br>3. காற்றாலை மின்சாரம் - திருநெல்வேலி, தூத்துக்குடி. | | 3 |

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** 7 **x** 5 = 35

| வினா எண் | விடை | மதிப் பெண் |
|---|---|---|
| 41. அ. | 1. புள்ளி விவரங்களை தொகுத்தல், ஒழுங்குற அமைத்தல், கணக்கிடுதல், முடிவுகளை கட்டுப்படுத்துதல் போன்றவற்றிற்கு ICT உதவுகிறது.<br>2. CD, DVD, SD Card, Projector, Smart Phone, இணையம், கம்ப்யூட்டர் போன்ற தகவல் தொழில் நுட்ப சாதனங்கள் வேகமாகவும், அதிகமாகவும் துல்லியமாகவும் பொருளியலுக்கு தகவல் தந்து உதவுகிறது.<br>3. Word, Excel, PPT, SPSS (Statistical Package for the Social Science) போன்றவை பொருளியல் ஆய்வாளர்களுக்கு பயன்படுகின்ற முக்கிய மென்பொருள் ஆகும்.<br>4. ICT வளர்ச்சி ஐந்து கட்டங்களை கடந்துள்ளது.<br>  1. கணிணி<br>  2. PC/Laptop<br>  3. நுண் செயலி<br>  4. இணையம்<br>  5. வயர்லெஸ் தொடர்புகள் | 5 |
| ஆ. | **பொருளாதார முறைகள் :**<br>1. முதளாளித்துவ பொருளாதாரம் 2. சமதர்ம பொருளாதாரம் 3. கலப்பு பொருளாதாரம்.<br>**பொருளாதாரத்தின் அடிப்படைப் பிரச்சினைகள்:**<br>1.என்ன பண்டம் உற்பத்தி செய்வது?<br>2.எவ்வாறு பண்டங்கள் உற்பத்தி செய்வது?<br>3.யாருக்காக பண்டங்கள் உற்பத்தி செய்வது?<br>**உற்பத்தி வாய்ப்பு வளைகோடு:**<br>ஒரு சமுதாயம் வரையறுக்கப்பட்ட வளங்களைக் கொண்டிருப்பதால் அதன் அனைத்து தெரிவுகளையும் உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டின் வாயிலாக மேற்கொள்ள இயலும். உற்பத்தி வாய்ப்பு வளைகோடு என்பது பல இணைகளில் இரு பண்டங்களின் உற்பத்தியை மேற்கொள்வதாகும். எ.கா. உணவு உற்பத்தி மோட்டார் வாகன உற்பத்தி. அதிக அளவு உணவு உற்பத்தியை பெற விரும்பினால் நாம் அதிக அளவு மோட்டார் உற்பத்தியை இழக்க கவண்டியுள்ளது.  <br>இது வாய்ப்புச் செலவிற்கு உட்பட்டதாகும். இதை வரைபடம் விளக்குகிறது. | 5 |

www.Padasalai.Net

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

| | | |
|---|---|---|
| | **வரைபட விளக்கம்.**<br>1.உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டின் மீது உள்ள புள்ளிகள் ($P_{1}$, $P_{2}$, $P_{3}$, $P_{4}$ ...) இரு பண்டங்களின் உற்பத்தி வாய்ப்பை குறிக்கிறது.<br>2. உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டிற்கு கீழ் அதாவது "$P_7$" பகுதி வளங்கள் முழுமையாக பயன்படுத்தாததைக் குறிக்கிறது.<br>3. உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டிற்கு மேல் அதாவது "P" பகுதி உற்பத்தி வாய்ப்பிற்கு அப்பாற்பட்டதாக உள்ளது. | |
| 42.<br>அ. | சாலை பொக்குவரத்து.<br>1. மாநிலத்தில் 28 தேசிய நெடுஞ்சாலைகள் 5036 கி.மீ. தொலைவினை இணைக்கின்றன.<br>2. தங்க நாற்கர திட்டம் முனையமாக நமது மாநிலம் உள்ளது.<br>3. சாலை போக்குவரத்தில் நாட்டிலேயே தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது.<br>இரயில் பொக்குவரத்து.<br>1. தமிழ்நாட்டில் உள்ள இருப்புப் பாதையின் மொத்த நீளம் ஆர் 6693 கி.மீ. ஆகும்.<br>2. சென்னையில் மேம்படுத்தப்பட்ட அதிவிரைவு மெட்ரோ இரயில் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.<br>விமானப் பொக்குவரத்து.<br>1. பெரிய சர்வதேச விமான நிலையமாக சென்னை சிறந்து விளங்குகிறது.<br>கப்பல் பொக்குவரத்து.<br>1. சென்னை, எண்ணூர், தூத்துக்குடி மற்றும் நாகப்பட்டினம் ஆகியவை தமிழ்நாட்டின் மிகப்பெரிய துறைமுகங்களாகும். | 5 |
| ஆ. | **இலக்கணம்.**<br>"ஒருவரிடம் உள்ள ஒரு பண்டத்தின் இருப்பு கூடுகின்ற பொழுது ஒவ்வொரு கூடுதல் அலகிலிருந்தும் கிடைக்கும் பயன்பாடு குறைகிறது"<br>**ஆல்பிரட் மார்ஷல்.**<br><br>**எடுகோள்கள்.**<br>1. பயன்பாட்டை அளவிட முடியும்.<br>2. பணத்தின் இறுதிநிலை பயன்பாடு மாறாது.<br>3. பண்டங்கள் ஒரே தரமானவை.<br>4. கால இடைவெளி இன்றி தொடர்ந்து நுகர வேண்டும்.<br>5. பழக்கவழக்கங்கள் மற்றும் வருமானத்தில் மாற்றமில்லை.<br><br>**விதியின் எடுத்துக்காட்டு விளக்கம்.**<br>ஒரு நுகர்வோர் 7 ஆப்பிள்களை ஒன்றன்பின் ஒன்றாக நுகர விரும்புகிறார். முதல் ஆப்பிள் சாப்பிடும் போது அவருக்கு அதிக பயன்பாடு கிடைகிறது. மேலும் ஐந்தாவது ஆப்பிளில் இருந்து பெற்ற பயன்பாடு பூஜ்ஜியம் ஆகும். ஆறாவது, ஏழாவது ஆப்பிளை நுகர்ந்தால் அவர்<br>பெறுவது எதிர்மறை பயன்பாடாகும். | 5 |


www.Padasalai.Net

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

**அட்டவணை**

| ஆப்பிள் | TU | MU |
|---|---|---|
| 1 | 20 | 20 |
| 2 | 35 | 15 |
| 3 | 45 | 10 |
| 4 | 50 | 5 |
| 5 | 50 | 0 |
| 6 | 45 | -5 |
| 7 | 35 | -10 |

**வரைபடம்**




**வரைபட விளக்கம்**

1. மொத்த பயன்பாடு உச்சத்தில் இருக்கும்போது, இறுதிநிலை பயன்பாடு பூஜ்ஜியமாக இருக்கும்.
2. மொத்த பயன்பாடு குறையும்போது, இறுதிநிலை பயன்பாடு எதிர்மறையாக இருக்கும்.

**முக்கியத்துவம்.**

1. பொருளியலில் பல விதிகளுக்கு இது அடிப்படை ஆகும்.
2. நிதி அமைச்சருக்கு உதவுகிறது.

**திறனாய்வு.**

1. பயன்பாட்டை அளவிடமுடியாது.
2. தொடர்ந்து நுகர்வது நடைமுறைக்கு சாத்தியமில்லை.

43. அ.

**விகித அளவு விளைவு விதி:**

நீண்ட காலத்தில் அளனத்து உற்பத்தி காரணிகளும் மாறக்கூடியவை. அளனத்து உற்பத்திக் காரணிகளும் மாறும் போது உற்பத்தியில் ஏற்படும் மாற்றமே விகித அளவு விளைவு விதி ஆகும்.

**விகித அளவு விளைவு விதியின் மூன்று நிலைகள்.**

**வளர்ந்து செல் விகித அளவு**


அனைத்து உள்ளீடுகளும் 1% உயரும் போது வெளியீடுகளும் 1% க்கும் மேல் உயர்கிறது.

**மாறா விகித அளவு**

அளனத்து உற்பத்திக் காரணிகளும் 1% உயரும் போது வெளியீடுகளும் அதே அளவு சம விகித அளவில் 1% உயரும.

**குறைந்து செல் விகித அளவு**

அனைத்து உள்ளீடுகளும் 1% உயரும் போது வெளியீடுகளும் 1% க்கும் குறைவாக உயர்கிறது.




**வரைபட விளக்கம்:**

1. a க்கும் b க்கும் இடையேயான பகுதி வளர்ந்து செல் விகித விளைவு விதியை குறிப்பிடுகிறது.
2. b க்கும் c க்கும் இடையேயான பகுதி மாறா விகித அளவு விளைவு விதியை குறிக்கிறது.
3. c க்கும் d க்கும் இளடகயயான பகுதி குறைந்து செல் விகித அளவு விளைவு விதியை குறிக்கிறது.

5

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| ஆ. | 1. **விவசாயிகளின் ஏழ்மை நிலை :** நுகர்விற்காகவும், விவசாயத் தொழிலை மேற்கொள்வதற்காகவும், மற்றும் குடும்ப விழாக்களுக்காகவும் விவசாயிகளை கடன்பெறத் தூண்டுகிறது.<br>2. **பருவமழை பொய்த்தல் :** அடிக்கடி பருவமழை பொய்த்துப் போவதால் வாங்கிய கடனை திருப்பிச் செலுத்த இயலாமல் அவதிப்படுகின்றனர்.<br>3. **வழக்குகள்:** நிலங்கள் தொடர்பான வழக்குகள் நீதிமன்றத்தில் இருப்பதால் அதற்காக செலவிட அதிக கடன் பெறுகிறார்கள், வழக்குகளும் இழுத்தடிக்கப்படுகின்றன.<br>4. **அதிக வட்டிவீதம் :** உள்ளூரில் வட்டிக்கு கடன் கொடுப்பவர்கள் அதிக வட்டி வசூலித்தல், இதனால் அசலையும் செலுத்த முடியாமல் விவசாயிகள் கடனிலேயே மூழ்கும் நிலை உள்ளது. | 5 |
| 44.<br>அ. | **நோக்கங்கள்**<br>1. அன்னிய நேரடி முதலீட்டை ஈர்த்து, நம் நாட்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியை<br>2. அதிகரித்தல்.<br>3. பன்னாட்டு வியாபாரத்தில் மற்றும் உலக ஏற்றுமதியில் நமது பங்கினை அதிகரித்தல்.<br>4. கூடுதல் பொருளாதார நடவடிக்கைகளை உருவாக்குதல்.<br>5. வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்.<br>6. கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்.<br>**பண்புகள்**<br>1. பாதுகாப்புடன் கூடிய நிலப்பகுதிகள்.<br>2. தனி அமைப்பால் நிர்வகிக்கப்படுகிறது.<br>3. நெறி முறைப்படுத்தப்பட்ட நடைமுறைகள்.<br>4. தனிப்பட்ட விருப்பப் பகுதியைக் கொண்டது.<br>5. தாராளமய பொருளாதார சட்டத்தால் நிர்வகிக்கப்படுகிறது. | 5 |
| ஆ. | (i) TFC காண்க : $TC = 10 + Q^3$<br>**TFC = 10**<br>(ii) TVC காண்க : $TC = 10 + Q^3$ Q=5 எனில்<br>$TC = 10+(5)^3$ (5x5x5)<br>TC = 10+125 (TVC)<br>**TVC = 125**<br>(iii) TC காண்க : TC = TFC + TVC<br>TC = 10 + 125<br>**TC = 135**<br>(iv) AFC காண்க :<br>$AFC = \frac{TFC}{Q} = \frac{10}{5} = 2$<br>**AFC = 2**<br>(v) AVC காண்க :<br>$AVC = \frac{TVC}{Q} = \frac{125}{5} = 25$<br>**AVC = 25**<br>(vi) AC காண்க :<br>AC=AFC + AVC<br>2+ 25<br>**AC = 27**<br>(அல்லது) $AC = \frac{TC}{Q} = \frac{135}{5}$<br>**AC = 27** | 5 |


**45. அ.** (5)

1. சுதந்திரத்திற்கு முன்னர் வணிக வங்கிகள் தனியார் இடம் இருந்தன, வங்கிகள் எண்ணிக்கையும் போதுமானதாக இல்லை.
2. இவ்வங்கிகள் அரசாங்கம் திட்டமிடலுக்கு உதவி செய்யவில்லை.
3. வட்டார ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்கும் தேவை இருந்தது.
4. கிராமப்புற மக்களிடையே வங்கிச் செயல்பாடுகளை ஊக்குவித்தல் மிகுந்த அவசியமாயிருந்தது.
5. ஆகையால் அரசு 14 பெரிய வணிக வங்கிகளை ஜூலை 19,1969 அன்று தேசியமயமாக்க முடிவு செய்தது. 1980 ஆம் ஆண்டில் அரசு மேலும் 6 வணிக வங்கிகளை தேசியமயமாக்கியது.

**ஆ.** (5)

1. ஒரே ஒரு உற்பத்தியாளர் எனவே முற்றுரிமையில் நிறுவனமே தொழிற்சாலை ஆகும். அதனால் கீழ்நோக்கி சரியும் தேவை வளைகோட்டை கொண்டுள்ளது. விலை குறைந்தால் மட்டும் அதிகம் விற்கமுடியும்.
2. முற்றுரிமை நிறுவன சமநிலையானது. 'E' என்ற MC = MR
3. சமநிலை உற்பத்தியில் நிறுவனம் இலாபம் பெறுகிறது.

சமநிலை உற்பத்தி = 3 அலகு
சராசரி வருவாய் = ரூ.80/-
சராசரி செலவு = ரூ.50/-
ஓர் அலகிற்கான லாபம் = ரூ.30/-
மொத்த லாபம் 30x3 = ரூ.90/- ஆகும்.




**46. அ.** (5)

1. **இந்தியா ஒரு கலப்பு பொருளாதார நாடு :** இந்திய பொருளாதாரம் கலப்பு பொருளாதாரத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இங்கு தனியார் துறையும், அரசு துறையும் இணைந்து செயல்படுகிறது.
2. **வேளாண்மையில் இந்தியா முக்கிய பங்கு வகிக்கின்றது:** இந்தியாவில் 60% மக்கள் தங்கள் வாழ்க்கை ஆதாரமாக வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த நடவடிக்கையில் ஈடுபடுகிறார்கள்.
3. **வளர்ந்து வரும் இந்திய சந்தை:** பல நாடுகளுக்கு வாய்ப்புகளை வழங்குகிறது முன்னேறி கொண்டிருக்கும் நாடுகளுக்கிடையே இந்தியாவின் சந்தை பிறநாடுகளுக்கு பல்வேறு வாய்ப்புகளை வழங்கி வருகிறது. இந்தியா FDI, FII வழியாக முதலீடு செய்ய ஆர்வம் காட்டி வருகின்றது.
4. **வளர்ந்து வரும் பொருளாதாரம்:** உலக பொருளாதாரத்தில் இந்தியா GDP யில் 7 வது இடத்தை கொண்டுள்ளது. சீனா நாட்டிற்கு அடுத்தபடியாக GDP 7.1% பெற்றதன் வாயிலாக இந்தியா வேகமாக வளர்ந்து வருகிறது.
5. **வேகமாக வளரும் பணிகள் துறை :** இந்தியாவின் GDP யில் பெரும் பங்கு பணிகள் துறையின் பங்களிப்பாகும். IT, BPO போன்ற தொழில் நுட்ப சேவைகள் பேரளவு வளர்ச்சி பெற்றுள்ளது.

**ஆ.** (5)

**கோட்பாடு விளக்கம்:**

1. கடன் நிதிக் கோட்பாடு புதிய தொன்மைக் கோட்பாடு எனவும் அழைக்கப்படுகிறது, **சுவீடன்** நாட்டைச் சார்ந்த பொருளியல் வல்லுநர்கள் **விக்செல், ஓலின், வைனர்** மற்றும் **குன்னர் மிர்தால்** ஆகியோர் இக்கோட்பாட்டை மேம்படுத்தினர்.
2. கடன் நிதிகளை பயன்படுத்திக்கொள்ள வழங்கப்படும் விலை வட்டி ஆகும்.
3. கடன் நிதி தேவை மற்றும் அளிப்பின் சமநிலைப் புள்ளியில் வட்டி விகிதம் தீர்மானிக்கப்படுகிறது.

**II.** கடன்நிதிக்கான தேவை : **I+C+H** (**LD** கோடு) :

1. முதலீட்டுத்தேவை (Investment) → **I**
2. நுகர்வுத்தேவை (Consumption) → **C**


www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com

3. பதுக்குவதற்கான தேவை (Hoarding) → **H**

**III. கடன்நிதிக்கான அளிப்பு : S+BC+DH+DI (LS கோடு) :**

1. சேமிப்பு (Savings) → S
2. வங்கிக்கடன் (Bank Credit) → BC
3. பதுக்கியதை மீட்டல் (Dishoarding) → DH
4. முதலீடு செய்யாதிருத்தல் (DisInvestment) → DI




**V.வரைபட விளக்கம் :**

1. வரைபடத்தில் LD கோடும் L.S கோடும் ‘E' என்ற புள்ளியில் வெட்டிக்கொள்கின்றன.
2. இந்த புள்ளி சமநிலை புள்ளி ஆகும். இப்புள்ளியில் வட்டிவீதம் OR, கடன் நிதி அளவு OM ஆகும்.


**47. அ.**

**விலை மாறாத போது AR மற்றும் MR கோடுகள்**

அட்டவணை

| விற்பனை | P | TR | AR | MR |
|---|---|---|---|---|
| 1 | 5 | 5 | 5 | 5 |
| 2 | 5 | 10 | 5 | 5 |
| 3 | 5 | 15 | 5 | 5 |
| 4 | 5 | 20 | 5 | 5 |
| 5 | 5 | 25 | 5 | 5 |
| 6 | 5 | 30 | 5 | 5 |

வரைபடம்





**AR** மற்றும **MR** கோடுகள் ஒன்றிணைந்து ஒரே கோடாக இருக்கும். இது **X** அச்சுக்கு இணையாக இருக்கும். **P=AR=MR.**

**விலை மாறும் போது AR மற்றும் MR கோடுகள்**

அட்டவணை

| விற்பனை | TR | AR | MR |
|---|---|---|---|
| 1 | 10 | 10 | - |
| 2 | 9 | 18 | 8 |
| 3 | 8 | 24 | 6 |
| 4 | 7 | 28 | 4 |
| 5 | 6 | 30 | 2 |
| 6 | 5 | 35 | 0 |
| 7 | 4 | 28 | -2 |

வரைபடம்




விலை மாறும் போது விலை பேதம் காட்டப்படும். எனவே **AR** எகோட்டிற்கு கீழே **MR** இருக்குமு.

5

**ஆ. இலக்கணம்:**

"விலை குறையும்போது தேவையின் அளவு அதிகரிக்கிறது, விலை அதிகரிக்கும்போது தேவை குறைகிறது" **ஆல்பிரட் மார்ஷல்.**

www.Padasalai.Net


Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

**எடுகோள்கள்:**

1. நுகர்வோரின் வருமானம், விருப்பம், மற்றும் சுவையில் மாற்றமில்லை.
2. பிற பொருட்களின் விலையில் மாற்றமில்லை.
3. பிற பதிலிகள் இல்லை.
4. பொருளின் தரத்தில் மாற்றமில்லை.


**தனி நபர் அட்டவணை** **வரைபடம்**

| விலை | தேவை அளவு |
|---|---|
| 5 | 1 |
| 4 | 2 |
| 3 | 3 |
| 2 | 4 |
| 1 | 5 |





தனிநபர் தேவைக்கோடு A, B மற்றும் C ஆகியவற்றை கூட்டினால் அங்காடி தேவை வளைகோடு பெறலாம்.

- விலை ₹ 3 ஆக இருக்கும் போது 2+2+4 = 8. 5
- விலை ₹ 1 ஆக இருக்கும் போது அங்காடி தேவை 6+8+8 = 22




**தேவை விதியின் விதிவிலக்குகள்**

விலை குறைவு தேவை சுருக்கத்தையும் விலை உயர்வு தேவை விரிவையும் ஏற்படுத்தும். இந்நிலையில் தேவை கோடு இடமிருந்து வலமாக மேல் நோக்கி உயரும். இது விதிவிலக்கான தேவை கோடு என அழைக்கப்படுகிறது.




www.Padasalai.Net